-151-

<u>பதிவஞ்சலில் ஒப்புகையுடன்</u>

மீன்வளத்துறை இயக்குநர் அலுவலகம்
நந்தனம், சென்னை—35.

மே.கு.எண்.832/எம்5/2018 நாள்.06.11.2020.

அரசாணை (3டி) எண்.11 கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் (மீன்—2) துறை நாள். 02.11.2020 அசலாக அனுப்பலாகிறது.

இணைப்பு. அரசாணை (அசல்).

ஒம்/—கி.கோமதி
மீன்வளத்துறை துணை இயக்குநர்
(பணியாளர்) (கூ/பொ)

பெறுநர்
திருமதி.சு.சூர்யா, இளநிலை உதவியாளர்.
மீன்வளத்துறை உதவி இயக்குநர், திண்டுக்கல் — மூலமாக.

நகல்.
மீன்வளத்துறை துணை இயக்குநர் (மண்டலம்) மதுரை.
மீன்வளத்துறை உதவி இயக்குநர், திண்டுக்கல்.
எஸ் பிரிவு கண்காணிப்பாளர், தலைமையலுவலகம்.
எஸ்2 பிரிவு உதவியாளர், தலைமையலுவலகம்.
எம்5 இருப்புக் கோப்பு.

//ஆணைப்படி அனுப்பலாகிறது//

கண்காணிப்பாளர்

சுருக்கம்

மீன்வளத்துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்ட செல்வி. S.சூர்யா என்பவரது பணியினை வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

கால்நடை பராமரிப்பு, பால்வளம் (மற்றும்) மீன்வளத் (மீன்–2) துறை

அரசாணை (3டி) எண்.11

நாள் 02.11.2020
திருவள்ளுவர் ஆண்டு 2051
ஐப்பசி – 17

படிக்கப்பட்டது :

1. மீன்வளத்துறை இயக்குநரின் கடித ந.க.எண்.832/எம்.5/2018, நாள் 20.03.2020.
2. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை, நாள் 23.01.2020.

------

ஆணை :

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் திண்டுக்கல் (மண்டலம்) மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் மீன்வளப் பாதுகாவலராகப் பணிபுரிந்த திரு. S.சுந்தரராமன் என்பவர் 02.01.2018 அன்று பணியிடை மரணமடைந்தார் என்றும் அவரது மனைவி திருமதி. சு.தேவி, திண்டுக்கல் மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் தனது 18.06.2018 நாளிட்ட விண்ணப்பத்தில் இறந்த அரசு ஊழியரின் மகளான செல்வி. S.சூர்யா என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குமாறு குறிப்பிட்ட காலவரம்பிற்குள் விண்ணப்பம் அளித்திருந்தார் என்றும், செல்வி. S.சூர்யா இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவரது கல்விச் சான்றிதழின் உண்மைத்தன்மை சரிபார்க்கப்பட்டுள்ளது என்றும் அவரது பிறந்த தேதி 07.11.1992 ஆகும் என்றும், காலஞ்சென்ற அரசுப் பணியாளரின் குடும்பத்தில் பொருள் ஈட்டுபவர் வேறு எவரும் இல்லை என்பதால், அவரது குடும்பம் வறிய நிலையில் தான் உள்ளது என பெரியகுளம் வருவாய் வட்டாட்சியர் சான்றளித்துள்ளார் என்றும் மீன்துறை இயக்குநர் தெரிவித்துள்ளார். எனவே, காலஞ்சென்ற அரசுப் பணியாளர் திரு. S.சுந்தரராமன் என்பவரின் வாரிசுதாரரும் மகளுமான செல்வி. S.சூர்யா என்பவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளராக கருணை அடிப்படையில் சென்னை மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் தற்காலிகமாக 05.08.2019 முற்பகல் முதல் பணிநியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறார் என்றும், பணி நியமன நாளில் அவரது வயது 26 ஆண்டுகள் என்றும் தெரிவித்து, கருணை அடிப்படையில் மீன்துறை அமைச்சுப் பணியில் தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்ட செல்வி. S.சூர்யா அவர்களின் பணியினை தனியர் பணியில் சேர்ந்த நாளான 05.08.2019 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு மீன்துறை இயக்குநர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணையடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணிகளை வரன்முறை செய்திட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

3. மீன்துறை இயக்குநரின் கருத்துருவை நன்கு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்க அரசு முடிவு செய்துள்ளது. அதற்கிணங்க, கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் திண்டுக்கல் மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளர் பணியில் 05.08.2019 முற்பகல் முதல் தற்காலிகமாகப் பணி நியமனம் செய்யப்பட்ட செல்வி. S.சூர்யா என்பவர் அப்பணியிடத்திற்கு தேவையான உடற் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அன்னாரது பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 05.08.2019 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி அரசு ஆணையிடுகிறது.

4. செல்வி. S.சூர்யா, இளநிலை உதவியாளரின் பணியானது அவர் பணியமர்த்தப்பட்ட நாளான 05.08.2019 முற்பகல் முதல் வரன்முறை செய்யப்படுவதால், அவர் வருடாந்திர ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் அவற்றை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார்.

5. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறையின் அ.சா.எண்.16221/Q1/2020-2, நாள் 19.10.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறையின் அ.சா.எண்.26968/G2/2020-1, நாள் 24.10.2020-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே.கோபால்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
மீன்துறை இயக்குநர், சென்னை –35.
செல்வி. S.சூர்யா, இளநிலை உதவியாளர்,
(மீன்துறை இயக்குநர் மூலமாக)

<u>நகல்</u>
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–9
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறை, சென்னை–9
இருப்பு கோப்பு / உதிரிகள்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

S. Thenu 2/11/2020
பிரிவு அலுவலர்
2/11/20 3/4